[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 மே 3]

1—1—1994 முதல் அகவிலைப்படியை உயர்த்தி அளிப்பதன் காரணமாகவும், மதிப்பூதியம் மற்றும் ஓய்வூதியம் உயர்த்தி வழங்குவதாலும் அரசுக்கு ஆண்டொன்றுக்கு மொத்த மாக 121.37 கோடி ரூபாய் செலவாகும் எனபதையும், இந்த நிதியாண்டில் மட்டும் 141.67 கோடி ரூபாய் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. மா. சுந்தரதாஸ் பொதுக் கணக்கு குழுவின் தலைவர்

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக குழுவின் நூற்று முப்பத்தொன்றாவது முதல் நூற்று நாற்பத்தி இரண்டாவது வரையிலான 12 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் நூற்று தொண்ணூற்று இரண்டாவது முதல் இரு நூற்று பத்தொன்பதாவது வரையிலான 28 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்,

மேற்படி அறிக்கைகளில் 201 முதல் 219 வரையிலான 19 அறிக்கைகள் போதிய அவகாசமின்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

அச்சிட்டப் பிரதிகள் கிடைத்தவுடன், அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக்-கொள்கிறேன் மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் அவர்களின் ஆட்சி,